Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :188 வைகாசி 22ஆம் நாள் வியாழக்கிழமை 04 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



19

வீட்டில் சமைத்த உணவை உண்பதே சிறந்தது
உணவகங்களில் உணவினைப்
பெற்றுக்கொள்ளும்பொழுது இயலுமான வரை
உணவுகளைப் பொதி செய்து
பெற்றுக் கொள்ளுவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

# தேர்தல் திகதி தொடர்பில் திங்களன்று இறுதி முடிவு!

## விருப்பு எண்கள் குறித்தும் அன்றையதினம் பரிசீலனை



கொழும்பு, ஜூன் 4

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதியை தீர்மானிப்பதற்காகத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை கூடவுள்ளனர் இவ்வாறு தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

02 ➤

## யாழ். மீனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் பாசையூர் கடற்பரப்பில் நேற்று அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற சஜித் என்ற இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு வயது 27.

வலையை விரிப்பதற்கு கடலுக்கு இறங்கிய குறித்த இளைஞர் நீண்ட நேர

02 ➤

## இளம்பெண் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 4

கிணற்றிலிருந்து இளம் பெண் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்

02 ➤

## சிறுவனின் சடலம் தூக்கில் மீட்பு!

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட அம்பலவன் பொக்கணைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன்

02 ➤



## சனியன்று தபாலகம் பூட்டு!

கொழும்பு, ஜூன் 4

நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களில் நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரச தகவல் திணைக்களம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (ம)

## பூட்டிய வீட்டுக்குள் இளைஞனின் சடலம்

வவுனியா, ஜூன் 4

வவுனியா காத்தார்சின்னகுளம் நாலாம் ஒழுங்கை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

02 ➤

## 13 ஆயிரம் ஹெக்டேயர் முல்லையில் ஆக்கிரமிப்பு

### வனவளத் திணைக்களம் எல்லை மீறுகின்றது

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே பெருமளவான நிலங்களை உடைமையாக்கியுள்ள வனவளத் திணைக்களம், மேலும் 13 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பை தனக்குரித்தாக்கி வர்த்தமானி வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் முடிவடைந்த பின்னர் 2012ஆம் ஆண்டு பெருமளவு நிலங்

02 ➤

### கனகராயன்குளத்தில்

## லொறியோடு மோதி 2 இளைஞர்கள் பலி

### ஒருவர் பொலிஸ் அலுவலர்

வவுனியா, ஜூன் 4

விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்த பொலிஸ் அலுவலர் உள்ளிட்ட இருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியவில் வவுனியா கனகராயன்குளம் ஏ9

02 ➤

## கவுணாவத்தை வேள்விக்கு வழங்கிய அனுமதி இரத்து

யாழ்ப்பாணம், ஜூன் 4

கவுணாவத்தை ஆலயத்தில் இடம்பெறவிருந்த வேள்விக்கான அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

கவுணாவத்தை ஆலயத்தில் நாளை 5ஆம் திகதி இரவும் 6ஆம் திகதி அதிகாலையும் வேள்விப் பூசை நடைபெற இருந்தது. இதற்கான அனு

02 ➤

### சொந்த வாகனங்களில் பயணிப்பவர்களுக்கு

## முகக்கவசங்கள் அவசியமில்லை

கொழும்பு, ஜூன் 4

தங்களுடைய சொந்த வாகனங்களில் பயணிப்போர் முகக்கவசங்கள் அணியத் தேவையில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மோட்டார் வாகனங்களில் பயணிப்பவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு முகக்கவசங்களை அணிந்து வாகனங்களை ஓட்டுகின்றனர். ஆயினும் சொந்த வாகனங்களில் பயணிப்போர் முகக்கவசம் அணிய வேண்டும் என்ற எந்த

02 ➤



## குப்பிளானில் வெட்டுக்கிளிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

குப்பிளான் பிரதேசத்தில் சுண்டங்காய் செடியில் வெட்டுக் கிளிகள் கூட்டமாக அவதானிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அவை உடனடியாகவே விவசாயிகளால் எரிக்கப்பட்டுள்ளன. விவசாயத்துறையினர் அவற்றை ஆராய முன்னர் எரிக்கப்பட்டமையால், எந்த வகையான வெட்டுக்கிளிகள் என்பதைக் கண்டறிவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் வெட்டுக்கிளிகள் அவதானிக்கப்பட்டால் அவற்றை உடனடியாக மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சாதாரண வெட்டுக்கிளிகள் சிலவும் விவசாய நிலத்தில்

02 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்று 1,735 நேற்று 52பேர் அடையாளம்

கொழும்பு, ஜூன் 4
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 52 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,735ஆக அதிகரித்துள்ளது.

நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படையினரும், கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து திரும்பி வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் தற்போது 883 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 836 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-22)

# கழிவுப்பொருளில் வாகனம்: மாணவனுக்கு நிதி உதவி!

கிளிநொச்சி, ஜூன் 4
கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கழிவுப்பொருட்கள் ஊடாக கார் வடிவிலான வாகனமொன்றினை உருவாக்கியுள்ள வர்த்தகப் பிரிவு மாணவன் அருள்தாஸ் ரொஷான் என்பவருக்கு, வலிகாமம் தெற்கு குப்பிளான் பகுதியைச் சேர்ந்த ஆனந்தன் மயூரன் என்பவரால் 50 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி மத்திய குழு உறுப்பினர் கருணாகரன் குணாளனின் வேண்டுகோளுக்கு அமைய இந்த உதவி மேற்கொள்ளப்பட்டது. (ம)



# இலங்கையில் அதிக மக்கள் உயிரிழக்க நேரிடும் ஆபத்து

## ரணில் பகிரங்க எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 4
'கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிகளை அரசு மறைத்து வருகின்றது. இதனால் எதிர்வரும் காலத்தில் மக்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழக்காவிட்டாலும், வறுமையின் காரணமாக உயிரிழக்க வேண்டி நேரிடும்' இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஏனைய உலக நாடுகள் வைரஸ் பரவலின் காரணமாக நெருக்கடியில் இருக்கும் மக்களுக்குச் சலுகைகளை வழங்கி வருகின்ற நிலையில் இலங்கையில் மாத்திரமே அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

கொரோனா நெருக்கடி காரணமாக எதிர்வரும் காலத்தில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருப்பதுடன், மக்களது வாழ்வாதாரத்துக்கும் சவால் ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் ஊதியம் பெறுபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறையினர் இன்று வருமானம் இன்றி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஏனைய காலங்களையும் விட நாட்டின் வருமானம் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியும் ஒன்பது சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும். அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வழங்கப்படும் நிவாரணங்களை அரசியல் செயற்பாடுகள் இன்றி வழங்குமாறே தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது. நிவாரணங்களை வழங்க வேண்டாம் என்று கூறவில்லை' - என்றார். (ம-22)

## 13 ஆயிரம்...

களை ஆக்கிரமித்து வனவளத் திணைக்களம் வர்த்தமானி வெளியிட்டிருந்தது. தற்போது மற்றுமொரு வர்த்தமானியை வெளியிடும் நடவடிக்கைகளை வனவளத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. அடையாளப்படுத்தப்பட்டுள்ள 13 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பையும் வரைபடமாக்கும் பணி தற்போது இடம்பெறுகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 5 ஆயிரத்து 154 ஹெக்டேயர், கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 3 ஆயிரத்து 392 ஹெக்டேயர் என்பனவும் அதனுள் உள்ளடங்குகின்றன. இந்தப் பகுதிகளில் மக்கள் மேய்ச்சல் தரைகள் மற்றும் விவசாய நிலங்களும் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஒ.5,105)

## கவுணாவத்தை...

மதி வலி. வடக்குப் பிரதேச சபையால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் பொசனை முன்னிட்டு இறைச்சிக்கடை கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கான அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் குறிப்பிட்டார். (ஒ.5)

## குப்பிளானில்...

காணப்படும். ஆகவே விவசாயிகள் பயிர்களில் அதிகளவான வெட்டுக்கிளிகளை அவதானித்தால் உடனடியாக திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அப்போது தான் களப்பயணம் மேற்கொண்டு அது தொடர்பில் ஆராய்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ஒ.5,7)

## பூட்டிய...

வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அங்கு ஒன்று கூடிய கிராம மக்கள், வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வீட்டின் ஜன்னல் வழியாக பார்த்தபோது தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த இளைஞன் சடலமாகத் தொங்கியதை அவதானித்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் குறித்த வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தவர் என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக தடயவியல் மற்றும் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-க-110)

## லொறியோடு...

வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் அரசடி வீதி நல்லூரை சேர்ந்த பொலிஸ் அலுவலரான ஜெயமூர்த்தி திசிகாந்தன், பளை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிசான் யனுஸ்டன் ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர் விடுமுறை நிமித்தம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு பிறிதொரு இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். இதன் போது கனகராயன்குளம் பகுதியில், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த இருவரும் வவுனியா பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-110)

## முகக் கவசங்கள்...

ஆலோசனையும் மக்களுக்கு வழங்கப்படவில்லை என சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான பபா பலிஹவதன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் தமது சொந்த வாகனத்தில் பயணிக்கும் போது முகக்கவசம் அணிவது எவ்விதத்திலும் பயனளிக்காது என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (அ.ரி)

## யாழ்...

மாகப் படகில் ஏறவில்லை. இதனை அவருடன் சென்றவர்கள் அவதானித்து இளைஞரைத் தேடியுள்ளனர். அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (சு-7)

## தேர்தல்...

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேட்பாளர்களுக்கான விருப்பு எண் வழங்குவது குறித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும். இதேவேளை பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சுகாதார வழிகாட்டுதல்களைப் பெற்றுள்ளோம். தேர்தலில் முதல் முறையாக வாக்களிப்பு நிலையங்களில் சுகாதாரப் பணியாளர்களை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளதால் அவர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும். தபால் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி ஜூன் 3 முடிவடைகின்றது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த இறுதித் திகதி ஜூன் 8 வரையில் தற்போது கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது - என்றார்.

பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பான சுகாதார வழிகாட்டுதல்கள் நேற்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

## இளம்பெண்...

உள்ள மாணிக்கபுரத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இராமலிங்கம் நிரோஜினி என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். யுவதியின் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சிறுவனின்...

ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அம்பலவன் பொக்கணை கிராமத்தினை சேர்ந்த 15 வயதுடைய சிறுவனே சடலமாக மீட்கப்பட்டான். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படை முன்னாள் தளபதி என்னைக் கொல்ல முயன்றார்

## நிஸங்க சேனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 4

**முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன இரண்டு பேரை ஆயுதங்களுடன் அனுப்பி என்னைக் கொலை செய்ய முயற்சித்தார். இவ்வாறு அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார்.**



அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஆணைக்குழுவின் எதிரில் நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்கியதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ரவீந்திர விஜேகுணரத்ன மறைமுக அடிப்படையில் கப்பம் கோரினார். இரண்டு பேரை ஆயுதங்களுடன் அனுப்பி என்னை கொலை செய்ய முயற்சித்திருந்தார். என்னை கடுமையாக விமர்சனம் செய்து மறைமுக அடிப்படையில் ரவீந்திர கப்பம் பெற்றுக்கொள்ள முயற்சித்தார்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ரவீந்திரவின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரை அவர் ஆயுதங்களுடன் வீட்டுக்கு அருகாமையில் அனுப்பி வைத்திருந்தார். தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்னிடம் இருந்த காரணத்தினால் நான் உயிர் தப்பிக்கொண்டேன்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மிரிஹான காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருக்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

# குறிப்பிட்ட நாள்களில் டெங்குப் பரிசோதனை

தென்மராட்சி, ஜூன் 4

வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையால், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் டெங்கின் தாக்கம் அதிகம் காணப்படும் பகுதிகளில் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும், 9 ஆம் திகதி கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும், 10 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும் டெங்கு பரிசோதனைகள் இடம்பெறும்.

பரிசோதனையில் சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், டெங்கு களப்பணி உதவியாளர்கள் கிராமிய சுகநல மேம்பாட்டுக்கான குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

பரிசோதனையின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்து பொருள்கள் காணப்படின், குடியிருப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறும், நீர் ஏந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

கிளிநொச்சியில்

# இரு மாதங்களில் இருவருக்கு டெங்கு

கிளிநொச்சி, ஜூன் 4



கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு மாதங்களில் இருவர் டெங்குத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் தற்போது டெங்கின் தாக்கம் ஆரம்பித்துள்ளது. சில மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிராந்தியசுகாதாரதிணைக்களம், மாவட்டத்தில் டெங்கை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இதுவரை இரு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடையாளம் காணப்பட்டவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மாவட்டத்தின் நகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சில இடங்களில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் அடையாளம் காணப்பட்டன. அவை அழிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நுளம்புகள் பெருகாத வகையில் தமது சூழலை வைத்திருக்க வேண்டும் என்று மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (க-6)

# இலங்கை பல்லின நாடு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4



இலங்கையர்களாகிய நாம் தற்போது அமெரிக்காவில் ஒடுக்கப்படுவோருக்கு எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். அதேவேளை இலங்கையும் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவர்கள் வாழும் ஓர் பல்லின நாடு என்பதை ஏற்றுக்கொள்ளத் தவறுவோமாயின் நாங்கள் நயவஞ்சகர்களாகவே கருதப்படுவோம் என்று முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் மினேபொலிஸ் நகரில் கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற கைது நடவடிக்கையொன்றில் ஜோர்ஜ் பிளாய்ட் என்பவர் பொலிஸாரால் கொல்லப்பட்டதையடுத்து.

அமெரிக்கா முழுவதும் கறுப்பினத்தவர்களின் உரிமைகளை வலியுறுத்திப் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதுகுறித்து வெளியிட்டுள்ள கருத்திலேயே மனோகணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்ததாவது;

அமெரிக்கா பல்வேறு இனங்களை உள்ளடக்கியதொரு நாடாகும். தற்போதைய சூழ்நிலையில் இலங்கையர்கள் அனைவரும் அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். அதேவேளை நாம் இலங்கை என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு மற்றும் இலங்கையர்கள் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சார்ந்தவர்கள் என்பதை ஏற்காவிட்டால் நாங்கள் உண்மையில் நயவஞ்சகத்தன மானவர்களாகவே அடையாளப்படுத்தப்படுவோம் - என்றார். (ப)

### பேருந்து நிலையங்களில் கைகழுவ ஏற்பாடு

பொதுப் போக்குவரத்துக்கு பாவிக்கப்படுகின்ற பேருந்து தரிப்பிடங்களில் கை கழுவுவதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே கொவிட் 19 தொற்று அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் பேருந்து தரிப்பிடங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மு.சுலோச்சனா உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார். (த-9)

# குளவி கொட்டி ஒருவர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜூன் 4

கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பத்தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

கடுங் காற்றுக் காரணமாக பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியால் சைக்கிளில் சென்ற குடும்பத் தலைவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

கடும் காற்று வீசும் காலங்களில் பனைமரங்களில் கூடு கட்டியுள்ள கருங்குளவிகள் ஓலையுடன் கீழே வீழ்ந்து வருடாந்தம் 50இற்கும் மேற்பட்டோரைத் தாக்குகின்றன.

மரங்களில் கருங்குளவிக் கூடுகள் காணப்படின் அது தொடர்பில் பொதுமக்கள் தகவல் அறிவிக்கும் பட்சத்தில் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

# ஹெரோய்னுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 4

ஒரு கிலோவுக்கும் அதிகமான ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.


பொலிஸ் போதைப்பொருள் பிரிவினருக்குகிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது திவுலப்பிட்டி பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர்களைச் சோதனைக்குட்படுத்தியபோதே அவர்களிடமிருந்து ஒருகிலோ 496 கிராம் மற்றும் 600 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-ரி2)

# முகக் கவசம் கட்டாயம்

சாவகச்சேரி, ஜூன் 4



சாவகச்சேரி பொதுச் சந்தையில் தனிநபர் இடைவெளிகளைப் பின்பற்றுவதில் திருப்தி காணப்படுகின்ற போதும், சிலர் முகக்கவசம் அணியாமல் சந்தைக்குள் நடமாடுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

அவ்வாறு முகக் கவசம் அணியாமல் நடமாடுவது தண்டனைக்குரியது. எனவே பொது மக்கள் கட்டாயம் அணிந்திருத்தல் அவசியம். சந்தைக்குள் முகக்கவசம் இன்றி நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் நடமாடினால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்களை அழைத்துவரும் வேலைத்திட்டத்தை கைவிடவில்லை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



**கொழும்பு, ஜூன் 4**

**நாட்டுக்கு திரும்பும் எதிர்பார்ப்பில் வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்களை அழைத்துவரும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் கைவிடவில்லை என்றும் இறுதி இலங்கையர் வரை அனைவரையும் அழைத்துவருவதே ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தினதும் நோக்கமாகுமென சிவில் விமான சேவைகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இதுவரை நாடு திரும்ப முடியாத நிலையில் வெளிநாடுகளில் தங்கியுள்ளவர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் சிலர் அமைப்பு ரீதியான வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். எதிர்க்கட்சியுடன் தொடர்புடைய சிலரும் அது தொடர்பில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். கொரோனா வைரஸ் பாதிப்புக் காரணமாக உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள 143 நாடுகளிலுள்ள 38,983 இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் கடந்த மார்ச் 19ஆம் திகதி விமான நிலையம் மூடப்பட்ட தினத்திலிருந்து இதுவரை இருபத்தொரு நாடுகளில் தங்கியிருந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றவர்கள், பயிற்சிகளுக்காகச் சென்ற அரச அதிகாரிகள் ஆகியோர் இதில் அடங்குகின்றனர் என்றார்.

(ஐ-ரி2)

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாநகர சைவ சமய விவகாரக்குழுவின் 2020 ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் 28 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே நல்லைக்குமரன் மலரில் வெளிவந்த கட்டுரைகள், வேறு புத்தகங்களில் வெளிவந்த ஆக்கங்கள் என்பவற்றைத் தவிர்க்கவும்.

எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் saivasamayavivaharam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம் அல்லது இறுவட்டுக்கள் மூலம் அனுப்புவது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. தங்களது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு மாநகர சபை ஆணையாளர் கேட்டுள்ளார். (க)

# எங்களின் இன்றைய தெரிவே நாளை பிள்ளைகளின் கலாச்சாரம்

## குமார் சங்கக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

"எங்களுடைய இன்றைய தெரிவுகளே நாளை எங்கள் பிள்ளைகள் சுவீகரிக்கப்போகும் கலாச்சாரத்தை தெரிவுசெய்யும்" என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பில் அவர் தனது ருவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய ருவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இனவாதம் மற்றும் அநீதிக்கு எதிரான அமெரிக்க மக்களின் செயற்பாடுகள் அனைவருக்கும் ஒரு தெளிவான பாடமாக அமைந்துள்ளது.

நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி அல்லது இலங்கையாக இருந்தாலும் சரி வேறொரு நாடாக இருந்தாலும் சரி நமது உணர்வுகளையும் உணர்திறனையும் தீர்மானிக்க வேண்டியது அரசு அல்ல. அது நீங்களே அல்லது நானே. நமது ஞானம், இரக்கம், பச்சாதாபம் மற்றும் புரிதலை அரசு தீர்மானிக்கக்கூடாது. நம் இதயங்கள் மற்றும் மனதின் வெளிப்படைத்தன்மையை மற்றவர்கள் கட்டுப்படுத்தவே முடியாது அல்லது வேறுபாடு மற்றும் வேறுபாடுகளைத் தழுவி மதிப்பிடுவதற்கான நமது திறனை கட்டுப்படுத்தவே முடியாது.

அதை நாமே தெரிவு செய்கின்றோம். எங்கள்பிரதிநிதிகளையும் நாங்கள் எங்கள் சொந்த மக்களிடமிருந்தே தெரிவு செய்கின்றோம். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் அரசுக்குக் கொண்டுவரும் குணநலன்களுக்கு நாங்களே பொறுப்பு. அவர்களின் மாற்றத்துக்கும் நாங்களே பொறுப்பு. அவர்களின் இயல்பை நமது செல்வாக்கு தீர்மானித்துள்ளது.

எங்கள் தெரிவுகள் அரசின் அணுகுமுறைகள், செயல்கள், கொள்கை மற்றும் சட்டத்தை வழிநடத்துகின்றன. சிறந்த அரசையும் சிறந்த ஆட்சியையும் நிறுவ நாம் சிறந்த மனிதர்களாக இருக்க வேண்டும்.

எங்கள் பலங்களும் பலவீனங்களும் ஒருவருக்கொருவர் நடத்தை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நடத்தை ஆகியவற்றில் பிரதிபலிக்கின்றன.

மரியாதை மற்றும் புரிதல் ஆகியனவற்றால் உலக கலாச்சாரத்தை அமைப்பதற்கு சாதாரண குடிமகனான நாம் ஒன்றாக இணைந்து அசாதாரணமான மாற்றத்தை அடைய முடியும்.

நாம் தைரியமாக இருக்க வேண்டும், நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நாம் முன்னெடுக்கும் பயணத்தில் தீவிரமாக இருக்க வேண்டும்.

எங்களுடைய இன்றைய தெரிவுகளே நாளை எங்கள் பிள்ளைகள் சுவீகரிக்கப்போகும் கலாச்சாரத்தைத் தெரிவுசெய்யும்.

எங்கள் வாழ்க்கையைப் பற்றி நாம் பெருமைப்பட விரும்பினால், எங்கள் பிள்ளைகள் எங்கள் பாரம்பரியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதை பார்க்க விரும்பினால், நாம் சிறந்தவர்களாக இருப்போம். நம் குழந்தைகளுக்காக ஒருவருக்கொருவர் நம்மிடம் இதைக் கோருவோம்" - என்றுள்ளது.

# இந்தியாவிலிருந்து வந்த தந்தை, மகள் தனிமைக்கு

மன்னார், ஜூன் 4

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக படகு மூலம் தலை மன்னாருக்கு வருகை தந்த தந்தை மற்றும் மகள் மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கோயம்புத்தூர் அகதிகள் முகாமில் இருந்து கடல் மூலம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இருவரும் தலைமன்னார் கடற்கரையை வந்தடைந்தனர்.

வருகை தந்த இருவரும் சின்ன பண்டிவிரிச்சான் கிராமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தற்போது கொரோனா தொற்று அபாயம் இருப்பதால், இருவரும் மடுப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இருவரையும் அழைத்துச் சென்ற நபர் அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளார். படகு மூலம் வந்த தந்தை மற்றும் மகள் இருவரையும் மடு பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று, மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நோயாளர் காவு வண்டி மூலம் இராணுவத்தின் உதவியுடன் மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (க-56)

# திருக்கேதீச்சர கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டது

மன்னார், ஜூன் 4

மன்னார் திருக்கேதீச்சரத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறாது என்று திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அமுலில் உள்ள ஊரடங்கால், இந்த வருடம் நடைபெறுவதாக இருந்த திருக்கேதீச்சர ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் அன்றைய தினம் நடைபெறாது. மீண்டும் கும்பாபிஷேகம் நடத்துவது தொடர்பான விவரங்களும், திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

கொரோனா வைரஸ் தாக்கம் இன்னும் நாட்டிலிருந்து முற்றாக அகலாத காரணத்தால், வெளியிடங்களில் இருந்து பக்தர்கள் திருவிழாவுக்கு வருகின்றமை, பக்தர்கள் ஒன்று கூடுகின்றமை சிரமங்களை அனைத்து தரப்பினருக்கும் ஏற்படுத்தும் என்று திருப்பணிச்சபையின் இணைச் செயலாளர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

(க-213)

# 12 சைக்கிள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கும், கிளிநொச்சி முறுகண்டியைச் சேர்ந்த 6 மாணவர்களுக்குமாக 12 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக இரட்ணசிங்கம் ஜெயசோதி தனது 60 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவியை வழங்கினார்.

(ஐ-222)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பு வீடுகளில் ஒன்றுகூடி கரம், செஸ் விளையாடாதீர்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து



**கொழும்பு, ஜூன் 4**

**உயிரிழப்புக்கள் நிகழ்ந்த வீடுகளில் கரம், சதுரங்கம் மற்றும் அட்டை விளையாட்டுக்களைத் தவிர்க்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க அறிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டலில் இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை கூடிய விரைவில் அடக்கம் செய்ய வேண்டும் அல்லது தகனம் செய்ய வேண்டும். அத்துடன் உயிரிழப்புக்கள் நிகழ்ந்த வீடுகளில் மதுபானம், புகைத்தல், வெற்றிலை போடுதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இறப்பு வீடுகளுக்கு வருபவர்களுக்கு பானங்களை வழங்க வேண்டுமாயின் சூடான பானத்தை ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தும் பாத்திரத்தில் வழங்க வேண்டும் என அந்த வழிகாட்டலில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியம்

## கபே அமைப்பு வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஜூன் 4

ஜனநாயகம் குறித்து குரல் எழுப்பும் பல அரசியல்வாதிகள், பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் அமைதி காக்கின்றமை மிகவும் கவலையளிப்பதாக கபே அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலில் பெண்களுக்கு இருக்கும் சந்தர்ப்பம் குறித்து பேசுவது மிகவும் சிறந்தது. நாட்டில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் பெண்களின் வீதமே அதிகமாகக் காணப்படுகின்றது. பெண்களின் பிரதிநிதித்துவத்துக்குக் குறைந்த இடமே காணப்படுகின்றது. மேலும் பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்போது எந்தவித அரசியல் கட்சிகளும் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்காமை தொடர்பில் மிகவும் கவலையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# கிராம மட்டத்தில் சுகநலக் குழுக்கள்

## தென்மராட்சியில் அமைப்பு

தென்மராட்சி,ஜூன் 4

தென்மராட்சி பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமிய மட்ட சுகநல மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிராமத்தில் காணப்படும் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குழுவில் கிராமத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களும், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சமுர்த்தி பயனாளிகள் சங்கம் , கமக்கார அமைப்பு, கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம் , சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், வணிகர் மன்றம் ,தாய்மார் கழகம் போன்ற பொது அமைப்புகளும் இணைந்து குழுவாக செயற்படவுள்ளன.

தற்போது நிலவும் கொரோனா தொற்று மற்றும் டெங்கு போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர்பாடல் பிரச்சினைகளை இனங்கண்டு கிராம மட்டத்தில் தேவையற்ற ஒன்றுகூடலைத் தடுத்தல், சுய தனிமைப்படுத்தல் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உதவுதல், வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்க விவசாயம் சார் அலுவலர்களின் உதவிகளைப் பெறல், உள்ளூர் உற்பத்திகள் மற்றும் மூல வளங்கள் காணப்படின் அவற்றின் மூலம் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதல், கிராம மட்டத்தில் மாணவர்களின் கல்வி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல்,

சிறுவர் மற்றும், குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்தல், டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் கிராமத்தில் காணப்படும் மலகூடப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுத்தல், மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல் குழுக்களாகச் செயற்படுதல் போன்ற பணிகள் இந்தக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# ரோஸியை கழற்றிவிட ஐ.தே.கட்சி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 4

கொழும்பு மாநகரசபையின் மேயர் பதவியில் இருந்து ரோஸி சேனாநாயக்கவை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் விவகாரங்களில் அவர் பங்கேற்காமல் இருக்கின்றமையே இதற்குக் காரணமென கூறப்படுகின்றது.

கொழும்பு மாநகராட்சி மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்புடன் சிறிகொத்தாவில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, கொழும்பின் துணை மேயர், முகமது இக்பால் அடுத்த கொழும்பு மேயராக முன்மொழியப்பட்டதாக அக்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# கொவிட் 19 நிதியத்தின் வைப்பு மீதி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 4


தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 230 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டபிள்யூ.என்.எஸ்.குளோபல் சேர்விஸ் லிமிடெட் நிறுவனம் 5,895,000 ரூபாவையும், கிரிபத்கொட ஈரிய வெடிய ஸ்ரீ ரத்ன விகாரையின் சங்கைக்குரிய பங்களாதேஷ் சந்திரஜோதி தேரர் ஒரு லட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

அவற்றுக்கான காசோலைகள் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 5 மில்லியன் ரூபாவை நிதியத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளது. அதன் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் அதற்கான காசோலையை கையளித்தார் என்றுள்ளது. (எ-ரி)



# வெட்டுக்கிளிக்கு கிருமிநாசினி கண்டுபிடிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 4

குருநாகல் மாவட்டத்தில் மாவத்தகமவில் பரவிவரும் வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான கிருமிநாசினியைக் கண்டுபிடிக்குமாறு விவசாயத் திணைக்கப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம். டபிள்யூ. வீரக்கோன், பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவத்தகமவில் கடந்த சில நாள்களாக ஒருவகை வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசம் செய்கின்றன.

தென்னை, வாழை, சோளம், மரவள்ளி மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் வெட்டுக்கிளிகளின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளன.

வடமேல் மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் டபிள்யூ.ஏ.சீலரத்ன திணைக்கள உயர் அதிகாரிகளுடன் அந்தப் பிரதேசத்துக்குச் சென்று கண்காணித்தார். இந்த வெட்டுக்கிளிகளை அழிக்க கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டபோதும், அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாமை அவதானிக்கப்பட்டது.

இந்த வெட்டுக்கிளிகள் சில ஆராய்ச்சிக்காக பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. வெட்டுக்கிளிகளை உடன் அழிக்காவிட்டால் அவை ஒருசில நாள்களில் 300 மடங்காகப் பெருகிவிடும் என்று மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தியாவின் பல மாகாணங்களில் ஒரு வகை வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசம் செய்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த அந்த நாட்டு மாநிலங்கள் துரிதமாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. தற்போது இலங்கையில் காணப்படும் வெட்டுக்கிளிகளை இந்தியாவுக்கு அனுப்பி ஆய்வு மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, சோமாலியா, கென்யா, உகாண்டா மற்றும் தன்சானியா போன்ற நாடுகளில் வெட்டுக்கிளிகளின் தாக்கத்தால் பயிர்கள் அழிந்து அந்த நாடுகள் பெரும் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. பயணிகள் பேருந்து பொன்னாலை பாலத்தில் வேகம்

## அச்சத்தில் உறைந்தனர் பயணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

**யாழ்ப்பாணம் காரைநகருக்கு இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. காரைநகர் சாலைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி, விபத்தை ஏற்படுத்தும் வகையில் பயணம் செய்தமை தொடர்பாக பொதுமக்கள் பலர் விசனம் தெரிவித்தனர்.**

நேற்றுப் புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து காரைநகருக்கு சேவையில் ஈடுபட்ட பேருந்து ஒன்று பொன்னாலை பாலத்தில், எதிரே வாகனங்களில் சென்ற பயணிகளை மோதித் தள்ளும் விதத்தில் பயணம் செய்தது என்றும் அந்த வீதியால் வாகனங்களில் சென்ற பலர், விபத்து ஏற்பட்டு விடுமோ என்று அச்சமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை பார்த்து மனம் பொறுக்க முடியாத ஒருவர் குறித்த பேருந்தை புகைப்படம் எடுக்க முற்பட்ட போது



அவரை பேருந்து நடத்துநர் ஏளனமாக ஏசிவிட்டு சென்றார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை பார்த்த பலர் இது தொடர்பாக பொன்னாலை சந்தியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரிடம் தெரிவித்தனர் எனவும் கடற்படை அதிகாரி இந்த விடயம் தொடர்பில் தான் கவனம் செலுத்துவதாக கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் இ.போ.ச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகள் தமக்கிடையே போட்டியிட்டு வீதிகளில் சவாரி செய்வதால் வீதிகளால் பயணிக்கும் பொதுமக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளமை தொடர்கதையாக உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (எ)

# விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்திய சுமந்திரனை இப்படியே விட்டுவிடுவதா ?

## ரெலோ முக்கியஸ்தர் விந்தன் கேள்வி

யாழ்ப்பாணம்.ஜூன் 04



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற பொறுப்பிலிருந்து கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை விமர்சித்து கருத்துக்களை வெளியிடுவது ஏற்றுக் கொள்ள முடியாத, மன்னிக்க முடியாத கீழ்த்தரமான செயற்பாடு. இதனைச் செய்த சுமந்திரனை இப்படியே விட்டுவிடுவதா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. சுமந்திரனை பதவி விலக்கும் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டால் அதனை எமது கட்சி முன்னின்று அழுத்தங்களை கொடுக்கும். நானும் ஒரு போராளி என்ற வகையில் வரலாறு தெரியாத சுமந்திரனை பதவி விலக அழுத்தங்களை கொடுப்பேன். இவ்வாறு ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரான முன்னாள் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் விடுதலைப் புலிகளை விமர்சித்தமை தொடர்பில் எமது கட்சியில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் காட்டமான கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

இது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்துக்கு அவர் நேரடியாக சென்று தனது நிலைப்பாட்டை தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார். கட்சித் தலைமை கூட்டத்தில் கூட்டத்திலும் தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்.

ஆயுத போராட்டத்தையும், தலைவர் பிரபாகரனையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி புலிகளை விமர்சித்த சுமந்திரன் அந்த நேர்காணலில் தான் 5 வயதில் இருந்து கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், சிங்கள மக்கள் மத்தியில் தான் வாழ்ந்தமை பெரும் பாக்கியமாக சொல்கின்றார்.

சுமந்திரனுக்கு அடிப்படையிலேயே போராட்டம், அதன் வலி, அதன் சுமை, தாக்கம், பெறுமதி பற்றி தெரியாதவர். ஆயுதப் போராட்டம் ஏன்? எதற்கு? யாரால் உருவானது என்றும் தெரியாது.

எத்தனை போராளிகள் தமது இன்னுயிர்களை கொடுத்தார்கள் என்றும், எத்தனை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும், கோடான கோடி சொத்துக்கள் இழக்கப்பட்ட வரலாறும் அதன் இலட்சியங்களையும் சுமந்திரன் கொச்சைப்படுத்தியுள்ளார்.

முதலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இந்த விடயம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கின்றது என்பதை பொறுத்து எமது கட்சியின் நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும் என்பதை தெரியப்படுத்துவோம், என்றார். (ஓ.5.20)

# வாக்களிக்க முற்படும்போது குடும்ப ஆட்சியை மறக்காதீர்

## ஐ.ம.ச. முன்னாள் எம்.பி. அபேசிங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 4

"நாட்டு மக்கள் அனைவரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு முன்னர் ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சி தொடர்பில் சிந்திக்க வேண்டும். அது தொடர்பில் தீர்மானம் எடுத்த பின்னரே வாக்களிக்க வேண்டும்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக்க அபேசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரையில் புதிய நாடாளுமன்றம் நியமிக்கப்படாமல் ஆட்சி இடம்பெற்று வருகின்றது. இதனால் இந்தக் காலப்பகுதி நாடாளுமன்றம் செயற்படாமல் ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதியாக வரலாற்றில் பதியப்படும். தற்போது இடம்பெறும் ஆட்சி முறை ஜனநாயக பண்புமிக்கதா? அல்லது அரசமைப்புக்கு அமைவானதா? அல்லது சர்வாதிகாரமானதா? என்பது தொடர்பில் மக்களே சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும்.

### பலரும் பதவி துறப்பு

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை உருவாக்குவதற்காகப் பெரும் பங்காற்றியவர்களே இன்று அரசின் போக்கை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

மத்திய வங்கியின் நிதி முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர்களான நிஹால் பொன்ஷேகா, துஷ்டி வீரகோன் ஆகியோர் தங்களின் பதவிகளைத் துறந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் நிதி முகாமைத்துவம் முறையாக இடம்பெறாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அரசின் தலையீட்டின் காரணமாகவே இவ்வாறு தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் தங்கள் பதவியிலிருந்து விலகுகின்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அனைவருக்கும் பொதுவாக சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்கிறார். ஆனால், இந்தப் பொதுவான சட்டத்தின் செயற்பாடு தொடர்பில் அண்மையில் ஒரு விடயத்தை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறப்பு நிகழ்வில் இந்தப் பொதுவானச் சட்டம் எவ்வாறு இயங்கியது என்பது தொடர்பில் மக்கள் தெளிவுற்றிருப்பார்கள்.

### அரச ஊழியர்களுக்கு ஆப்பு

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஒளடதங்களுக்கு விலைக்கட்டுப்பாடு இல்லை. அரச ஊழியர்களின் ஊதியத்திலிருந்து அரைப்பகுதி அவர்களுக்கு அறிவிக்காமலே அரசால் அபகரிக்கப்பட்டுள்ளது.

### பெற்றோல் விலை குறைப்பில்லை

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ள போதிலும் அதன் பயன்கள் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தனியார் துறையைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்குத் தொழில் பறிபோகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டிய இடர்மிகு தருணத்தில் நாடு உள்ளது.

### 69 லட்சம் மக்களும் உணர்ந்துகொள்ளவும்

தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியதுபோன்று நாங்களும் மக்களிடம் இப்போது நலமா? என்று கேட்கின்றோம். நலம் என்றால் எதிர்வரும் பொதுத்தேர்தலின் போதும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்து அவர்களை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது அவர்களுக்கு ஆதரவாக வாக்களித்த 69 இலட்சம் மக்களிடம் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாடே பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள நிலையில் வீதிகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு சீனா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து பல மில்லியன் ரூபாவை கடனாகப் பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் இது அவசியம்தானா?

### கொரோனா இல்லையேல் 'மாஸ்க்' எதற்கு?

பொதுத் தேர்தலை நடத்துவதற்காகக் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்றால், எதற்காக முகக்கவசம் அணிய வேண்டும். அரசின் செயற்பாடுகளை மக்கள் மறந்துவிடுவார்கள் என்று அரசு செயற்பட்டு வருகின்றது. எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் அவற்றை நினைவுபடுத்துகின்றோம். நாட்டு மக்களே சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வேண்டும்." - என்றார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கற்கையை மாணவரே கைவிடாதீர்

## அதிபர்களுக்கும் அறிவுறுத்து

வவுனியா, ஜூன் 4

வவுனியா தெற்கு வலய கல்வித் திணைக்களம் மாணவர்களுக்கு 'சூம்' செயலி மூலமாக இலவச கற்றல் வகுப்புக்களை நடத்துகின்றது. அதற்கேற்ப மாணவர்களை வழிப்படுத்துமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொவிட் 19 தாக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி விடுமுறை அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

அதனை ஈடுசெய்யும் முகமாக வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் அனுசரணையில் வவுனியா தெற்கு வலயத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரம், க.பொ.த. சாதாரணதரம், புலமைப் பரிசில் பரீட்சைக்கான கற்பித்தல்கள் 'சூம்' செயலி மூலமாக இலவசமாக வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு அதிபர்கள் வழிப்படுத்துவதோடு பாட ஆசிரியர்களும் தமது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தவேண்டும்.

அதே சமயம் குறித்த வகுப்புக்களில் பங்குபற்றாத மாணவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-18)

### கமநல சேவைகள் சட்டத்தை செயற்படுத்த

# வவுனியாவில் முடியுமாயின் யாழ்ப்பாணத்தில் முடியாதா?

யாழ்ப்பாணம், ஜூன் 4

**கமநல சேவைத் திணைக்கள சட்டம் வவுனியா மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏன் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.**

வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களை ஆக்கிரமித்து வேலிகள் அமைத்தபோது அந்த மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தார். அதாவது, வேலிகளை பிடுங்கி அகற்றியிருந்தார்.

வவுனியா மாவட்டத்தை விடவும் அதிகமான ஆக்கிரமிப்பு இடம்பெறுவது யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே. குறிப்பாக யாழ்ப்பாண நகரின் மத்தியிலும் நல்லூர், திருநெல்வேலி பகுதிகளிலும் வேகமாக குளங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதற்கு எதிராக எந்த திணைக்களங்களும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக வேடிக்கை பார்க்கின்றனர்.

எனவே இது தொடர்பில் கமநல சேவைத் திணைக்களம் மற்றும் மாநகர சபை என்பன நீர்நிலைகளைக் காக்க உரிய சட்ட நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (த-105)



# பருத்தித்துறை நகரில் தொற்றுநீக்கி விசிறல்

தென்மராட்சி, ஜூன் 4

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கொரோனாத் தொற்றை தடுப்பதற்கு கிருமிநீக்கி நேற்றுமுன்தினம் விசிறப்பட்டது.

பருத்தித்துறைப் பொதுசுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்புடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர் படையணியினர் தொற்றுநீக்கி விசிறினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# கிராம அலுவலர் மீது முல்லையில் தாக்குதல்

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராம அலுவலர் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிராம அலுவலரான பு.கஜகோகுலன், இதுபற்றி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருக்கு முறையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மந்துவில் கிராம அலுவலர் மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்துவிட்டு திரும்பியபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் பிரச்சினைக்குரிய காணி உரிமையாளர் கிராம அலுவலரை மறித்து கெட்டவார்த்தைகளால் பேசி தாக்குதல் நடத்தியுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிராம அலுவலர் ஊடாக உடனடியாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கும் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்கொள்ளையர்கள், மரக்கொள்ளையர்கள், சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் என பல மாபியா கும்பல் அரசியல் பின்னணியில் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறான சமூக சீர்கேடுகளை தட்டிக் கேட்க முற்படும் கிராம அலுவலர்கள் மறைமுகமாக அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். (த-19)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் 70 மில்லிகிராம் குடு போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 19 வயது இளைஞனே கைதானார்.

அவர் விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (த-7)

# தேர்தலை எதிர்கொள்ள தயாராகவே உள்ளோம்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

எந்தநேரத்தில் வேண்டுமானாலும் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் தொடர்பில் தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் மாலை வெளியான பின்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் அது மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கும். எனவே தான் தேர்தலை சில மாதங்களுக்கு பிற்போடும் நோக்கில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. தற்போது அந்த கால எல்லை எமக்கு கிடைத்தது.

முன்கூட்டியே அறிவித்தபடி ஜூன் 20 தேர்தல் நடைபெறாது. எனவே, வைரஸ் கட்டுக்குள் வந்த பின்னரே எந்த நாளில் தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

தேர்தல் ஆணைக்குழு கோரிக்கைவிடுத்த வேளையே, ஜனாதிபதி உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தால் இந்தப் பிரச்சினைக்கு முன்கூட்டியே தீர்வு கண்டிருக்கலாம் என்பதையும் குறிப்பிடாக வேண்டும்." - என்றார். (த-44)

# இராணுவத்தின் சான்றுகளால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

அளவெட்டியில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் இராணுவத்தினர் ரோந்துசென்றபோது, மல்லாகம் சுடலையை அண்மித்த பகுதியில் இருந்த சிலர் தப்பியோடியுள்ளனர். அந்த இடத்தை இராணுவத்தினர் சென்றுபார்த்தபோது 2 பெற்றோல்குண்டு, வாள், சைக்கிள் என்பனகாணப்பட்டனஎன்றும்அவற்றை மீட்டு மறுநாள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியிருந்தனர் என்றும் தெரிவித்த பொலிஸார், சைக்கிள் உரிமையாளர் என்ற அடிப்படையில் ஒருவரை கைதுசெய்துள்ளோம் என்று தெரிவித்தனர். (த-26)

முல்லை. சிவநகர் கிராமத்தில்

# கிராம அலுவலர்களுக்கு தொடர்கிறது அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சிவநகர் கிராமத்தில் பணியாற்றும் கிராம அலுவலர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வருகின்றார்கள். குற்றம்புரிந்த சிலரே அரசியல் பின்னணியில் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

சிவநகர் பகுதியில் சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கை தொடர்பில் தந்தை மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சிறுமி தவறான முடிவை எடுத்திருந்தார். பின்னர் காப்பாற்றப்பட்டிருந்த நிலையில், தந்தையிடமிருந்து முல்லைத்தீவு மருத்துவமனை தண்டம் அறவிட்டிருந்தது. அதன்பின்னரே அலைபேசி ஊடாக கிராம அலுவலர் அச்சுறுத்தப்பட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகளின் செல்வாக்கு மற்றும் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாக கலாசார சீர்கேடுகளை தட்டிக் கேட்க முடியாத நிலைக்கு கிராம அலுவலர்கள் தள்ளப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரணதர பரீட்சையில் வடக்கு மாகாணத்தின் நிலை



■ இராமச்சந்திரன் நிர்மலன்
புற்றளை

இலங்கையைப் பொறுத்தவரை பாடசாலைக்காலத்தில் மூன்று பொதுப்பரீட்சைகள் தேசியமட்டத்தில் நடைபெறுகின்றன. அப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருகின்றபோது வடக்கு மாகாணக் கல்வியின் நிலை தொடர்பாக பொதுவாகச் சமூகமட்டத்தில் விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன. அண்மையில் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளில் வடமாகாணத்தின் நிலை தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மீது பல்வேறுபட்ட விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையானது உயர்தரத்தில் பொருத்தமான பாடத்துறைகளைத் தெரிவுசெய்யவும் ஏனைய கற்றல் செயற்பாடுகளைத் தொடரவும் மற்றும் வேலைவாய்ப்புக்களுக்கும் அடிப்படையான தகைமையாகக் கொள்ளப்படுகின்றது. இப் பரீட்சை ஆறு பிரதான பாடங்களையும் மூன்று தொகுதிப்பாடங்களையும் கொண்டு அமைந்துள்ளது. இவ் வருடம் வெளியாகிய க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் வடமாகாணமானது உயர்தரம் கற்கத்தகுதியுடையோர் சதவீதத்தில் இறுதிநிலையான ஒன்பதாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அட்டவணை-1 க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் மாவட்ட நிலை

| மாவட்டம் | உயர்தரம் கற்கத்தகுதியுடையோர் சதவீதம் | தேசியநிலை |
|---|---|---|
| மன்னார் | 74.67 | 07 |
| யாழ்ப்பாணம் | 69.27 | 19 |
| வவுனியா | 67.70 | 21 |
| முல்லைத்தீவு | 63.09 | 24 |
| கிளிநொச்சி | 60.51 | 25 |

(மூலம் : பரீட்சைத்திணைக்களம்)

அட்டவணை 1 இனை நோக்குகின்றபோது வடமாகாணத்தைச் சேர்ந்த ஒரு மாவட்டமான மன்னார் மாவட்டம் ஏழாவது நிலையினைப் பெற்றுள்ளது. மன்னார் மாவட்டம் 2016 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக முன்னேற்றமடைந்து ஏழாவது இடத்தினைப் பெற்றது பாராட்டப்பட வேண்டிய விடயம். இதேவேளை 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ். மாவட்டம் இலங்கை ரீதியில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாவட்டமாகக் காணப்பட்டது. இவ் பின்னடைவு தொடர்பாகச் சமூக ஆர்வலர்கள் தமது கவலையை வெளியிட்டு வருகின்றனர். 2019 ஆம் ஆண்டு நாட்டின் உயர்தரத்துக்குத் தகுதி பெற்றோரின் சதவீதம் 73.84% ஆகக் காணப்படுகின்றது. வடமாகாணத்தில் இந்த சதவீதத்தைவிட உயர்வான உயர்தரத்துக்குத் தகுதியுடையோர் சதவீதத்தைக் கொண்டுள்ள ஒரே ஒரு மாவட்டமாக மன்னார் மட்டுமே காணப்படுவது கவலைதரும் விடயமாகும்.

இதேபோல் வடமாகாணத்தில் காணப்படும் பன்னிரண்டு கல்விவலயங்களின் உயர்தரத்துக்குத்தகுதி பெற்றோரின் சதவீத அடிப்படையிலான வலயத் தர நிலையினை நோக்கினால் அவையும் பின்னடைவையே வெளிக்காட்டுகின்றன.

வடமாகாணத்திலுள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களின் தேசியமட்ட நிலையினை நோக்குகின்றபோது முதல் பத்து வலயங்களில் எந்தவொரு வடமாகாண வலயமும் இடம்பெறாமை கவலை தருகின்ற விடயமாகும். ஆனால் இறுதிப் பத்து தேசிய மட்ட நிலைகளில் வடமாகாணத்தின் ஐந்து கல்வி வலயங்கள் காணப்படுகின்றமையும் மேலும் கவலை தரக்கூடிய விடயமாகும். இதேவேளை நாட்டின் க.பொ.த உயர்தரத்திற்குத் தகுதியுடையோர் சதவீதம் 73.84% ஆகக் காணப்படுகின்றது. இதனைவிட அதிகமாக சதவீதம் கொண்ட கல்வி வலயங்களாக மன்னார் மற்றும் யாழ் கல்வி வலயங்கள் மாத்திரமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

அட்டவணை-2 க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் - வலயநிலை

| கல்விவலயம் | உயர்தரத்துக்குதகுதியுடையோர்சதவீதம் | தேசியநிலை |
|---|---|---|
| மன்னார் | 77.13 | 16 |
| யாழ்ப்பாணம் | 75.86 | 22 |
| வடமராட்சி | 72.81 | 46 |
| வவுனியாதெற்கு | 68.81 | 68 |
| மடு | 67.25 | 73 |
| தென்மராட்சி | 65.86 | 80 |
| முல்லைத்தீவு | 65.17 | 85 |
| வலிகாமம் | 64.34 | 89 |
| வவுனியாவடக்கு | 63.10 | 92 |
| கிளிநொச்சி | 60.51 | 94 |
| துணுக்காய் | 57.96 | 97 |
| தீவகம் | 53.03 | 99 |

(மூலம் : பரீட்சைத்திணைக்களம்)

அட்டவணை-3 வடமாகாணத்தில் உயர்தரம் கற்கத்தகுதியுடையோர் சதவீதம்

| ஆண்டு | வடமாகாணத்தில் உயர்தரம் கற்கத்தகுதியுடையோர்சதவீதம் | தேசியமட்டத்தில் உயர்தரம் கற்கத்தகுதியுடையோர்சதவீதம் |
|---|---|---|
| 2014 | 64.19 | 69.12 |
| 2015 | 60.38 | 69.33 |
| 2016 | 60.66 | 69.94 |
| 2017 | 66.12 | 73.05 |
| 2018 | 69.99 | 75.09 |
| 2019 | 67.74 | 73.84 |

(மூலம் : பரீட்சைத்திணைக்களம்)

2014 ஆம் ஆண்டிலிருந்தான வடமாகாணத்தில் க.பொ.த உயர்தரம் கற்கத் தகுதியுடையோர் சதவீதம் படிப்படியாக அதிகரித்து வருவதனை அட்டவணை3 மூலம் அவதானிக்கலாம். 2019 ஆம் ஆண்டு சிறிய பின்னடைவைக் கண்டுள்ளதையும் அவதானிக்கலாம். எனினும் 2019 ஆம் ஆண்டு தேசியமட்டத்திலும் க.பொ.த உயர்தரம் கற்கத் தகுதியுடையோர் சதவீதத்திலும் குறைவு ஏற்பட்டு இருப்பதும் நோக்கத்தக்கது.

க.பொ.த உயர்தரத்திற்குத் தகுதி பெறுவோர் சதவீதம் படிப்படியாக அதிகரித்துச் சென்றாலும் வடக்குமாகாணத்தின் ஒன்பதாம் நிலை காரணமாக சமூகமட்டத்தில் கல்வித்துறையில் உள்ளவர்கள் மீது அழுத்தமும் விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது.

இது எவ்வாறு இருப்பினும் மாகாணத்தின் நிலையினைக் கணிப்பதில் வேறு சில காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது மறுக்கமுடியாது. க.பொ.த சாதாரண தரத்திலுள்ள பிரதானபாடங்களில் மொழி மற்றும் சமயம் என்பன தமிழர்,சிங்களவர்களுக்கு இடையில் வேறுவேறான வினாத்தாளைக்கொண்டவை. அதேபோல் தொகுதிப்பாடங்களில் பரத நாட்டியம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களும் வேறுவேறான வினாத்தாளைக்கொண்டவை.

பிரதான பாடங்களான மொழி மற்றும் சமயம் என்பவற்றின் 2019 ஆம் ஆண்டுப்பெறுபேறுகளை நோக்குகையில் A,B,C பெற்றோரின் சதவீதங்களில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. பௌத்த சமய பெறுபேறுகளை நோக்குகின்றபோது 34.77% ஆனவர்கள் A சித்தியையும் 17.24% ஆனவர்கள் B சித்தியினையும் 22.59% ஆனவர்கள் C தரச்சித்தியினையும் 14.73 % ஆனவர்கள் D தரச்சித்தியினையும் பெற்று 89.32% ஆனவர்கள் சித்திபெற்றுள்ளனர். அதேவேளை சைவநெறிப் பாடத்தில் 25.12% ஆனவர்கள் A தரச்சித்தியையும் 15.46% ஆனவர்கள் B தரச் சித்தியினையும் 24.72% ஆனவர்கள் C தரச்சித்தியினையும் 20.19 % வீதமானவர்கள் D தரச்சித்தியினையும் பெற்று 85.49% ஆனவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதேபோல் சிங்கள மொழி, தமிழ்மொழி பாடங்களில் பெற்றுக்கொண்ட தரங்களின் சதவீதங்களில் மாறுபாடுகள் காணப்படுவதனையும் அவதானிக்கலாம்.

அட்டவணை-4 2019ஆண்டு மொழி,சமயப்பாடங்களில் சித்தித்தரங்களின் சதவீதம்

| பாடம் | A (%) | B (%) | C(%) | S(%) | சித்திவீதம் |
|---|---|---|---|---|---|
| பௌத்தம் | 34.77 | 17.24 | 22.59 | 14.73 | 89.32 |
| சைவநெறி | 25.12 | 15.46 | 24.72 | 20.19 | 85.49 |
| சிங்களம் | 20.11 | 20.46 | 31.88 | 18.94 | 91.40 |
| தமிழ் | 9.30 | 16.27 | 35.13 | 26.35 | 87.05 |

(மூலம் : பரீட்சைத்திணைக்களம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 04 அவதானிக்கின்ற போது பௌத்தம் மற்றும் சைவநெறி , சிங்களம் மற்றும் தமிழ் என்பவற்றில் A,B,C,S என்பவற்றைப் பெற்றுக்கொண்டவர் சதவீதம் மாற்றம் அடைவதனை அவதானிக்கலாம். இவ் வினாத்தாள்களின் கடினச்சுட்டி மாறுபடுவதனை அவதானிக்கலாம். எனவே வேறுவேறு கடினச்சுட்டிகளைக்கொண்ட வினாத்தாள்களின் அடிப்படையில் 3C,3S அடிப்படையாகக்கொண்டு சித்திவீதம் கணித்து மாகாண நிலைகளைக் கணிக்கும் முறையானது அப்பாடங்களினால் தாக்கத்துக்கு உட்படும். சிங்கள மாணவர்கள் சிங்களம், பௌத்தம் ஆகிய பாடங்களுக்கு C அல்லது அதற்கு மேல் பெறுகின்றவர் விகிதம் அதிகமாகும் போது அவர்கள் இலகுவாக 2C இனைப் பெற்றுவிடுகின்றார்கள். மேலதிகமாக ஒரு C மூன்று S பெறுகின்ற போது அவர்களின் சித்தி பெற்றோர் சதவீதம் அதிகரிக்கின்றது. 3C,3S இனை அடிப்படையாகக்கொண்டு சித்திவீதம் கணிக்கும் போது இது பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

சிங்கள,தமிழ் மாணவர்களுக்கு இடையே வேறுவேறு பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட மொழி மற்றும் சமயப்பாடங்களுக்குரிய புள்ளிகளை ஒரே நியம அளவிடைக்கு மாற்றாமல் இவ்வாறு தரங்களை வழங்கி ஒப்பிடுவது தவறாகும்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் மொழி மற்றும் சமயப் பாடங்களில் Cஅல்லது அதற்கு மேல் பெற்றவர்களின் சதவீதத்தை நோக்கும்போது வடக்கு மாகாணம் இரண்டாம் மூன்றாம் நிலைகளைப் பெறுகின்றபோது தமிழ் மற்றும் சமயபாடங்களில் ஒன்றிலோ அல்லது இரண்டிலுமோ சிங்களம் மற்றும் பௌத்தம் ஆகிய பாடங்களிலும் பார்க்க C அல்லது C யிலும் அதிகமாகப் பெற்றவர் சதவீதம் அதிகமாகவோ அல்லது அண்ணளவாகச் சமமாகவோ காணப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பௌத்தம் மற்றும் சிங்களப் பாடங்களில் C அல்லது அதற்கு மேல் பெற்றவர் சதவீதம் தமிழ் மற்றும் சைவநெறிப்பாடங்களுக்கு C அல்லது அதற்கு மேல் பெறுபவர்களின் சதவீதத்திலும் அதிகமாகும்.

வேறுவேறு வினாத்தாள்களைக் கொண்ட மொழி மற்றும் சமயம் என்பவற்றை உள்ளடக்கிய 3C ,3S அடிப்படையாகக் கொண்ட சித்திவீதம் கணிக்கும் முறை இவ்விரு பாடங்களினாலும் தாக்கத்துக்கு உட்படும். இதனால் சில காலத்துக்கு முன் வடமாகாணம் நன்மைகளைப்பெற்று வந்தது இப்போது அதன் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றது. எனவே இவ்வாறான தரவரிசைப்படுத்தும் முறைகள் புள்ளிவிபரவியல்



ரீதியில் வலுவற்றவை ஆனபோதிலும் வடமாகாணம் க.பொ.த சாதாரணதரத்தில் பெரும்பாலான பாடங்களில் தேசியமட்ட சித்திவீதத்திலும் குறைவான சித்திவிதத்தை பெற்றுள்ளமையினை அவதானிக்க கூடியதாகக் காணப்படுகின்றது. மாகாண,மாவட்ட,வலய தேசிய நிலைகளுக்கு அப்பால் வடமாகாணம் கல்வியில் எழுச்சி பெறவேண்டும் என்பதே அனைவரினதும் அவா ஆகும்.

அட்டவணை -5 மொழி,சமயப்பாடங்களில் C அல்லதுஅதற்குமேல் பெற்றோர் சதவீதம்

| ஆண்டு | C அல்லதுஅதற்குமேல் பெற்றோர் சதவீதம் | | | | வடமாகாண தர நிலை |
|---|---|---|---|---|---|
| | பௌத்தம் | சைவநெறி | சிங்களம் | தமிழ் | |
| 2005 | 57.09 | 65.11 | 56.84 | 57.28 | 4 |
| 2006 | 63.74 | 61.91 | 55.51 | 59.49 | 4 |
| 2007 | 64.47 | 68.34 | 58.46 | 52.92 | 3 |
| 2008 | 65.71 | 75.23 | 58.31 | 48.14 | 5 |
| 2009 | 59.15 | 86.66 | 48.41 | 43.81 | 2 |
| 2010 | 62.23 | 69.85 | 52.91 | 47.31 | 6 |
| 2011 | * | * | 60.3 | 44.69 | 9 |
| 2012 | 72.61 | 86.59 | 67.54 | 52.45 | 8 |
| 2013 | 67.81 | 84.81 | 65.76 | 56.05 | 6 |
| 2014 | 67.38 | 71.07 | 70.88 | 51.41 | 9 |
| 2015 | 76.13 | 64.33 | 72.24 | 53.56 | 9 |
| 2016 | 77.72 | 66.36 | 69.09 | 51.55 | 9 |
| 2017 | 71.3 | 60.96 | 75 | 69.06 | 9 |
| 2018 | 72.08 | 66.74 | 76.79 | 71.77 | 8 |
| 2019 | 74.59 | 65.3 | 72.46 | 62.26 | 9 |

(மூலம் : பரீட்சைத்திணைக்களம்)

**வடமாகாணத்திலுள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களின் தேசியமட்ட நிலையினை நோக்குகின்றபோது முதல் பத்து வலயங்களில் எந்தவொரு வடமாகாண வலயமும் இடம்பெறாமை கவலை தருகின்ற விடயமாகும். ஆனால் இறுதிப்பத்து தேசிய மட்ட நிலைகளில் வடமாகாணத்தின் ஐந்து கல்விவலயங்கள் காணப்படுகின்றமையும் மேலும் கவலைதரக் கூடிய விடயமாகும்.**

## மண்ணுக்குள் புதைகிறது மனித இனம்



விஞ்ஞான உலகின்று
விதிர் விதிர்த்து நிற்கிறது
மருத்துவ குழுமம் இன்று
மருந்தின்றித் துடிக்கிறது.
வல்லரசு நாடுகளும்
வலுவிழந்து நிற்கிறது.
வில்லெடுத்துப் போர்புரிய
வீரனையும் காணவில்லை.
கல்லெடுத்து எறிவதற்கு
கயவனுன்னைக் காணவில்லை
சொல்லெடுத்துப் போர்புரிய
வாய்க்கவசம் விடுகுதில்லை
ஏவுகணை ஏவிவிட
எதிரி உன்னைக் காணவில்லை
ஓ....
கண்ணுக்குத் தெரியாத
உன்னோடு போராடி
மண்ணுக்குள் புதைகிறது
மகத்தான மனித இனம்

**பாமகள் சண்முகராஜா**
தரம் 09, கிளி / இராமநாதபுரம்
மேற்கு அ.த.க.பாடசாலை
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

# ஐ.தே.கவால் பயனில்லை என்கின்றார் அளுத்கமகே

கொழும்பு, ஜூன் 4

தமிழ் மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையில் பலமான அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்து நம்புவதால் எவ்வித பயனும் கிடைக்கப்பெறாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வியத்தக அமைப்பின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தலை பிற்போட எதிர்தரப்பினர் முன்னெடுத்த அரசியல் சூழ்ச்சிகள் நீதிமன்றத்தின் ஊடாக தோற்கடிக்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலை விரைவாக நடத்த தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுமக்கள் முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்கினைப் பெற்று பலமான அரசாங்கத்தை அமைக்கும். இந்த வெற்றியில் தமிழ், முஸ்லிம் மக்கள் பங்குதாரர்களாக வேண்டும் என்பதே எமது பிரதான எதிர்பார்ப்பு - என்றார். (ம)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி; வவுனியாவில் ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 4

வவுனியா சாந்தசோலையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நபரொருவரை பொலிஸார் நேற்றுப் பிற்பகல் கைதுசெய்தனர்.



வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய உபபொலிஸ் பரிசோதகர் சுபசிங்க, பொலிஸ் சாயன்களான ஜெயந்த, நிமால், கான்ஸ்டபிள்களான பிரசாந்த், சபிதரன், லலித், பிரசன்னா, மற்றும் பந்துல ஆகியோரை கொண்ட பொலிஸ் குழுவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 20 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவும் (ஸ்பிறிற்), பெரல்களும் கைப்பற்றப்பட்டன. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் துயர நிகழ்வுகள் இலங்கைக்கு பாடமா? பாதையா?

## தமிழீழ விடுதலை இயக்கத்தின் அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 4

அமெரிக்க நிகழ்வுகளில் இருந்து இலங்கை அரசு பாடம் கற்காவிடில் எதிர் காலம் மிக மோசமடையலாம். உலகின் அமைதியையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் இனவாதமும் நிறவெறியும் இந்த நவீன யுகத்திலும் தொடர்வது இந்த பூகோளத்தின் சாபக்கேடேயாகும். அதன் விளைவுகளை தற்போது உலக வல்லர சான அமெரிக்கா அனுபவித்து வருகின் றது. இது ஏனைய உலக நாடுகளுக்கு சிறந்த பாடமாக அமைந்துள்ளது இவ் வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத் துள்ள அறிக்கையில்மேலும்குறிப்பிட்டுள் ளதாவது:

அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் புளொய்ட் என்பவர், பொலிஸா ரால் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரி வித்து அமெரிக்கா முழுவதும் போராட்டங் கள் இடம்பெற்று வருகின்றன. இதன்மூ லம் அரசியல் காரணங்களுக்காக அமெ ரிக்காவில் விதைக்கப்பட்ட நிறவெறி பல தசாப்தங்கள் கடந்தும் அறுவடை செய்யப் பட்டுக்கொண்டிருக்கின்றமை வெளிப்பட் டுள்ளது. இந்த நிலையை பார்க்கும் போது இலங்கை அமெரிக்காவைவிட பல மடங்கு ஆபத்தை நோக்கி செல்லப்போகி றது என்ற அச்சம் எழுந்துள்ளது.

அபிவிருத்தி மூலம் இனப் பிரச்சினை களை தீர்க்கலாம் அல்லது மழுங்கடிக்க லாம் என்ற இலங்கை அரச தலைவர்க ளின் கோட்பாடு பொய்யானது என்பதை நிரூபித்துள்ளது அமெரிக்கப் பிரச்சினை.

அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு உரிமை தேவை இல்லை, தலைவர்களுக்கே தேவை என்ற தொனிப்பட கூறிவரும் கருத்துக் கள் எவ்வளவு தவறானவை என்பதை அமெரிக்க நிகழ்வுகள் நிரூபித்துள்ளன.

தற்போது அமெரிக்கா வில் இடம்பெறும் சம் பவங்கள் தொடர்பில் கருத்துக்களை கூறமு டியாத திரிசங்கு நிலை யில் இலங்கை உள் ளமை எமது நாட்டின் ஜனநாயகத் தோல்வி யேயாகும். இங்கு பூர் வீகக் குடிகளான தமிழ் தேசிய இன மக்களையே இன ரீதி யாக வஞ்சிக்கும் அரசு அமெரிக்காவில் நிற ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள்பற்றி பேசுவதற்கு என்ன தார்மீகம் உள்ளது? என்ற கேள்வி முன்நிற்கின் றது.

**அபிவிருத்தி மூலம் இனப் பிரச்சினை களை தீர்க்கலாம் அல்லது மழுங்கடிக்கலாம் என்ற இலங்கை அரச தலைவர் களின் கோட்பாடு பொய்யா னது என்பதை நிரூபித்துள்ளது அமெரிக்கப் பிரச்சினை.**

சில குறுகிய அரசியல் நோக்கங்களுக்கா கவும் தேர்தல் வெற்றிக்காகவும் இலங்கை யில் மிக தாராளமாக இனவாதம் விதைக் கப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக தற்போதைய ஆட்சியாளர்கள் அளவுக்க திகமாக இனவாதத்தையும் மதவாதத்தை யும் வளர்ப்பதில் அக்கறை காட்டி வருகின் றனர். இவர்களின் செயற்பாடுகளாலும் போதனைகளாலும் இனவாதம் அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு வரு வதுடன், மாநகரம் முதல் குக்கிராமம் வரை இதற்கு இசைவாக்கம் அடைந்துள் ளன. இவ்வாறன நிலை தொடர்வதனால் இன்று இனவாதத்தை பரப்பும் அரசியல் வாதிகளே நினைத்தாலும் மக்களை இன வாதத்திலிருந்து மீட்டு இன நல்லிணக் கத்தை நோக்கி கொண்டுசெல்ல முடியாத நிலை உள்ளது - என்றுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 12 . 09 . 1941 |  | 03 . 06 . 2020 |

## கந்தையா சிவசம்பு

**(ஓய்வு பெற்ற உதவி தொழில்நுட்ப பொறியியலாளர்**
**கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் SLMS (Ltd) புல்மோட்டை)**

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவசம்பு நேற்று (03.06.2020) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - காசிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற சந்திர சேகரம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரதிதேவியின் அன்புக் கணவரும் வாசுகி (லண்டன்), கௌசலை (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), குகேந்திரன் (கஜமுகன் பல்பொருள் வாணிபம், புத்தூர் சந்தி, மீசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதாசன் (லண்டன்), புஸ்பதனராஜன் (Instructor NAITA), சுபரஞ்சினி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மாரிமுத்து, கைலாயப்பிள்ளை மற்றும் காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன் (முன்னாள் தபாலதிபர், மீசாலை), ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜீபன், ரன்யா, கஜனி, ஜஸ்ருதி, சேஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2020) வியாழக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரதிவாசம்
மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்:-
ச. குகேந்திரன் (மகன்)

**077 368 6873, 077 618 1216**

# மரண அறிவித்தல்

**திருமதி. பினாகபாணி நீலாம்பிகை** (சக்கரை ரீச்சர்)
(முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி)



62/2 வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீலாம்பிகை பினாகபாணி நேற்று புதன்கிழமை (03/06/2020) கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பினா கபாணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்க ளான வள்ளிநாயகி, வாலாம்பிகை, வைத்தீஸ்வரன், சர்வ லோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோக ராஜா, காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், தங்க ராணி ஆகியோரின் மைத்துனியும், அரியகுமார்- பகீரகி, வசந்தமாலா- கணேசராஜா, வசந்தகுமாரி- காண்டீபன், முரளிதரன்- ஸ்ரீபவானி, ஸ்ரீதரன்- சேய்மணி காலஞ்சென் றவர்களான அசோகமலர், அசோக்குமார், லிங்கேஸ்வரி ரேணுகா, பாலராஜன்- பூங்கோதை, மஞ்சுளா- குகேந்திரன், கௌசல்யாதேவி- வருணா ஆகியோரின் சிறிய தாயாரும், பகீரதி- அரியகுமார், ராஜ்குமார்- மஞ்சுளா, ராஜராஜன்- சங்கீதா ஆகியோரின் மாமியாரும், கார்த்திக் - விதுஷினி, காயத்திரி, கிரிஷாந்- நிஷானி, இந்துஜா- கிரிஷாந்க், ஜனுஷா, றோஜனா, தர்வீன்குமார், பாரதிநேயன், சிவபை ரவி, ராதா- றொட், ஆஷ்வி- பாலத், அபிராமி, மதுரா, லக்ஷ்மி, தர்ஷன், கஜோஷன், சௌமிய, அக் ஷயா ஆரா தனா, சுலக்சனா, ஹம்சனா ஆகியோரின் பேர்த்தி யும், அலேக்சான்டர் அர்ஜனா, மானசா ஆகியோரின் பூட் டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04/06/2020) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்;** **0112716624**
**குடும்பத்தினர்** **0112361861**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு நேரப் பாடசாலை ஆராய்கிறது அமைச்சு

கொழும்பு, ஜூன் 4

**பாடசாலைகளைத் திறந்து காலை, மாலை என இரு நேர வகுப்புக்களை நடத்துவது தொடர்பான சாதக, பாதக நிலைமைகளைக் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.**

மாணவர்களை ஒரு மீற்றர் இடைவெளியில் அமரச் செய்யும் பட்சத்தில் வகுப்பறையில் ஏற்படும் இட நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் உள்ள பல பாடசாலைகளில் வகுப்பறை நெருக்கடி காணப்படுகின்றது. நாட்டில் தற்போது கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் மாணவர்களிடையே ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுவதால் வகுப்பறையில் இடப் பற்றாக்குறை ஏற்படும்.

பாடசாலைகளை ஒரே நேரத்தில் நடத்துவதால் மாணவர்கள் ஒன்றுகூடுவதையும் தவிர்க்க முடியாது போகும். அத்துடன் கிராமப்பற பாடசாலைகளில் போதியளவு நீர், மலசல கூட வசதிகள் இல்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்னர் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்காக 32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதமும், சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதமும் நடைபெறவுள்ளதால் முதலில் அவர்களுக்கான கற்றல் நடவடிக்கையை ஆரம்பிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ)

## மாலை வேளையில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூன் 4

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென்மாகாணங்களின் பல இடங்களில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், பொலனறுவை மாவட்டத்தின் பல இடங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் சிறிளவு மழை பெய்யும் சாத்தியம் உண்டு.

நாடு முழுவதும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வரையில் அதிகரிக்கலாம். இடியுடன் மழை பெய்யும் பிரதேசங்களில் தற்காலிகமாக காற்றின் வேகம் அதிகரிக்கலாம். மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை எதிர்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கையுடன் மக்கள் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது . (எ-ரி2)

## ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.ஜூன் 4

2022 உயர்தரப் பிரிவுகளில் கற்கை நெறிகளுக்கு கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ள, கல்லூரியில் கல்வி கற்று உயர்தரத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதியான மாணவர்கள் உட்பட்ட அனைவரும் httpi//Info.mone.gov.lk என்ற முகவரிக்கு ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

உயர்தரக் கற்கை தொடர்பான விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

தாவடி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினரின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அரசுக்கு எதிராக செயற்படுகிறார் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்

*ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 4

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அரசுக்கு எதிராகவே செயற்படுகின்றார். தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேர்தல்கள் ஆணையாளர் பொதுத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய நாடாளுமன்றத்தை விரைவாகக் கூட்டுவதே தற்போதைய தேவையாக உள்ளது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுவதால் எந்தப் பயனும் ஏற்படாது. கொரோனா வைரஸ் தொற்று தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அதனால் பொதுத்தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதே எதிர்த்தரப்பினரைத் தவிர்த்து ஏனைய தரப்பினரது எதிர்பார்ப்பாக உள்ளது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கான காரணிகள் தற்போது பகுதியளவில் வெளியாகியுள்ளன.

ஆனால் ஆரம்ப மற்றும் உண்மைக் காரணிகள், தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்ற விடயங்கள் இதுவரை வெளியாகவில்லை. விரைவில் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்படுவார்கள்- என்றார். (எ)

## ரயிலில் பயணம் செய்ய 10க்கு முன் பதிவு செய்க!

கொழும்பு, ஜூன் 4

ரயில் போக்குவரத்து வசதியைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரையில் நிறுவன ரீதியில் பதிவு செய்து கொள்ளாத பயணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்துகொள்ளுமாறு ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

சில பயணிகள் தமது நிறுவனங்களின் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்டு, அவர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கிக் கொண்டதன் பின்னர் பெரும்பாலும் ரயிலில் பயணம் செய்யாதிருக்கும் நிலை உருவாகியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன் காரணமாக வேறு பயணிகளுக்காக ஆசனத்தை ஒதுக்குவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். ரயிலில் பயணிக்கும் தமது ஊழியர்கள் குறித்த விவரங்களை இனிவரும் காலங்களில் வாரத்துக்கு ஒருமுறை, நிறுவனங்களின் ஊடாக ரயில்வே திணைக்களத்துக்கு அனுப்பும் போது, உரிய முறையில் ரயில் போக்குவரத்தைப் பயன்படுத்தும் ஊழியர்களின் பெயர்களை மாத்திரம் அனுப்புமாறு நிறுவனங்களை கோரியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## ஓய்வுபெற்ற தாதியர்களை மீள இணைக்கிறது சப்ரகமுவ

ஓய்வுபெற்ற தாதியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

தெரணியகல ஆதார மருத்துவமனையின் அபிவிருத்திப் பணிகளைக் கண்காணிப்பதற்காகச் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கடந்த திங்கட்கிழமை சென்றிருந்தார். அங்கு நடைபெறும் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-ரி2)

## தனிச் சிங்கள பௌத்தர்கள் மீள மாற்றம் ஏற்படுத்துவர்!

*ஞானசார தேரர் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூன் 4

சமூக விரோதிகள் மக்கள் ஆணையை மீண்டும் பெற முயற்சிக்கின்றார்கள். இந்த முறை பொதுத்தேர்தலில் தனிச் சிங்கள பௌத்த மக்கள் பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புராதன தொல்பொருள் மையங்களுக்குச் சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவகாரம் தற்போது மீண்டும் பேசுபொருளாக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பௌத்த மத்திய நிலையங்களுக்கும், தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்துக்கும் சொந்தமான காணிகள் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தெவனகல விகாரைக்குச் சொந்தமான காணி ஆக்கிரமிக்கபபட்டுள்ளதை தொடர்ந்து எழுந்த சர்ச்சையால் தொல்பொருள் மையங்கள் தொடர்பில் ஆராய ஜனாதிபதி செயலணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தற்போது எழுந்துள்ள பிரச்சினை கிடையாது. காலம் காலமாகவே காணப்படும் பிரச்சினை. கிழக்கில் பௌத்த மத உரிமைகள் மீறப்பட்டுள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. 70 வருட காலம் நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் செய்த பிழைகளின் தவறைத் திருத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவுக்கு உண்டு. தொல்பொருள் ஆக்கிரமிப்புத் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் எதிர்காலத்தில் பெரும் விளைவுகள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு.

சமூக விரோதிகள் மக்களாணையை மீண்டும் பெற முயற்சிக்கின்றார்கள். இந்தமுறை பொதுத் தேர்தலில் தனிச் சிங்கள பௌத்த மக்கள் பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள்-என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2020 இல் வெளியிடப்பெற்றது.